**ಕರ್ನಾಟಕ ಪ್ರೌಢ ಶಿಕ್ಷಣ ಪರೀಕ್ಷಾ ಮಂಡಳಿ, ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು – 560 003**

**KARNATAKA SECONDARY EDUCATION EXAMINATION BOARD, MALLESWARAM, BENGALORE - 560 003**

**ಎಸ್.ಎಸ್.ಎಲ್.ಸಿ ಮುಖ್ಯ ಪರೀಕ್ಷೆ – 2021**

**S.S.L.C MAIN EXAMINATION – 2021**

**ಪತ್ರಿಕೆ / Paper – 02**

**ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ + ದ್ವಿತೀಯ ಭಾಷೆ + ತೃತೀಯ ಭಾಷೆ / ಎನ್.ಎಸ್.ಕ್ಯೂ.ಎಫ್**

**Subjects : First Language + Second Language + Third Language / NSQF**

**(CCERF/CCERR/CCEPF/CCEPR/NSR/NSPR)**

**Key Answers**

**ಉತ್ತರಗಳ ಸಂಕೇತ**

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10T** | **Code No. : 10T**

**ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 40+40+40=120]** | **[Total No. of Questions : 40+40+40=120**

## FIRST LANGUAGE TAMIL

கீழ்க்காணும் முற்றுப்பெறாத தொடர்களுக்கான நான்கு விடைகளுள் சரியான விடைக்கான குறியீட்டைத் தேர்ந்தெடுத்து கொடுக்கப்பட்டுள்ள **OMR** தாளில் கருப்பு அல்லது நீல நிற மை கொண்ட பந்து முனை எழுதுகோலால் குறிப்பிட்ட வட்டத்தை நிரப்புக :- **[40 × 1 = 40]**

**1)** நல்லமுது என்று பாரதிதாசன் குறிப்பிடுவது -

A) கனிச்சாறு  B) தீம்பால் திரட்டு

C) இனிமைத் தமிழ்  D) தீங்கரும்புச் சொல்

Ans : (C) இனிமைத் தமிழ்

**2)** எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று -

A) சிலப்பதிகாரம்  B) புறநானூறு

C) மனோன்மணீயம்  D) பெரியபுராணம்

Ans : (B) புறநானூறு

**3)** இரவு பகல் அறியாமல் இறைவனை நினைத்து உருகியவர் -

A) மாணிக்கவாசகர் B) கம்பர்

C ) வீரமாமுனிவர் D) சேக்கிழார்

Ans : (A) மாணிக்கவாசகர்

**4)** சொல்லால் செய்யுளை அழகு செய்வது -

A) பொருளணி B) சொல்லணி

C) ஒட்டணி D) சிலேடை

Ans : (B) சொல்லணி

**5)** பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும் பாரினில் நடத்த வந்தவர்கள் -

A) வதுவை மகளிர் B) புதுமைப் பெண்கள்

C) பாட்டாளிகள் D) கொல்லாச்சாரியர்

Ans : (B) புதுமைப் பெண்கள்

**6)** தூறு என்பதன் பொருள் -

A) நெருப்பு B) படை

C) புதர் D) கயிறு

Ans : (C) புதர்

**7)** பிட்டுக்காக சொக்கநாதன் சுமந்தது -

A) மண் B) கல்

C) மரம் D) நீர்

Ans : (A) மண்

**8)** அந்தம் என்ற சொல்லின் எதிர்ச் சொல் -

A) பந்தம் B) ஆனந்தம்

C) ஆதி D) அண்டம்

Ans : (C) ஆதி

**9)** வேழம் என்ற சொல் உணர்த்தும் இருபொருள் -

A) மூங்கில், ஆழம் B) கரும்பு, யானை

C) கடல், படகு D) உழவு, எருது

Ans : (B) கரும்பு, யானை

**10)** திருப்பெருந்துறையில் உறைபவன் -

A) சிவன் B) திருமால்

C) பிரம்மன் D) இந்திரன்

Ans : (A) சிவன்

**11)** நெல் முதிர்ந்தால் இவர் கைக்குப் போய்ச் சேரும் -

A) நெசவு முதலாளிகள் B) தொழில் முதல்வர்

C) நெல் முதலாளிகள் D) கதிர் அறுப்போர்

Ans : (C) நெல் முதலாளிகள்

**12)** விலங்குகளுக்கு மருத்துவமனை நிறுவியவர் -

A) அதியமான் B) அசோகன்

C) செங்குட்டுவன் D) விசயன்

Ans : (B) அசோகன்

**13)** பாடினி கலங்குமாறு பாணன் கூறிய சொல் -

A) பம்பு சீர் வேழம் B) வம்பதாம் களபம்

C) கம்ப மா D) கை மா

Ans : (D) கை மா

**14)** இது ஓசோனுக்கு எமன் -

A) சோடியம் குளோரைட்

B) குளோரோ ஃபுளோரோ கார்பன்

C) ஹைட்ரோ குளோரோ குவின்

D) கார்பன் டை ஆக்சைட்

Ans : (B) குளோரோ ஃபுளோரோ கார்பன்

**15)** ஒட்ட நறுக்கினும் மொக்கை வாலாட்டுவது -

A) எலி B) சிங்கம்

C) நாய் D) நரி

Ans : (C) நாய்

**16)** புறத்தினில் கருத்த காந்தி -

A) காமராஜர் B) அப்துல் கலாம்

C) ஆல்பிரட் நோபல் D) நெல்சன் மண்டேலா

Ans : (D) நெல்சன் மண்டேலா

**17)** மரம் வளர்த்தால் -

A) மழை இல்லை B) நரகம் இல்லை

C) உணவு இல்லை D) வீடு இல்லை

Ans : (B) நரகம் இல்லை

**18)** இளைஞனின் நண்பன் -

A) மண்புழு B) இலட்சியம்

C) நாய் D) குரங்கு

Ans : (B) இலட்சியம்

**19)** வேல் வடித்துக் கொடுத்தல் இவரின் கடன் -

A) தாய் B) தந்தை

C) கொல்லன் D) வேந்தன்

Ans : (C) கொல்லன்

**20)** "கீ போர்ட்" - இதன் தமிழாக்கம் -

A) மையச் செயலகம் B) காட்சித் திரை

C) விசைப் பலகை D) சுட்டி

Ans : (C) விசைப் பலகை

**21)** "இவர்கள் கைவண்ணம் இங்கு கண்டோம்" என்ற தொடர் -

A) சேக்கிழார் கூற்று B) கம்பன் கவித்தொடர்

C) பாரதிதாசன் கூற்று D) தமிழன்பன் கவித்தொடர்

Ans : (B) கம்பன் கவித்தொடர்

**22)** 'பிசி' என்பதன் பொருள் -

A) முதுமொழி B) பழங்கதை

C) விடுகதை D) பறவை

Ans : (C) விடுகதை

**23)** கன்னடத்தின் ஆதி கவி -

A) அக்கமகா தேவி B) பசவண்ணன்

C) பம்பன் D) சர்வக்ஞன்

Ans : (C) பம்பன்

**24)** இறுக்கிப் பிடிக்க நினைத்தாலும் இயங்கிக் கொண்டே இருப்பது -

A) காற்று B) மழை

C) வெள்ளம் D) ஆறு

Ans : (A) காற்று

**25)** மனத்துக் கண் மாசில்லாமல் இருப்பது -

A) வரம் B) இன்பம்

C) அறம் D) மறம்

Ans : (C) அறம்

**26)** கடுகு உள்ளம் கொண்டோர் -

A) நன்னயம் செய்வோர் B) துணைநலம் சான்றோர்

C) வினைநலம் மிக்கோர் D) தன்னலம் மிக்கோர்

Ans : (D) தன்னலம் மிக்கோர்

**27)** கையால் மறைக்க முடியாதது -

A) செவ்வாய் B) ஞாயிறு

C) கண் D) காது

Ans : (B) ஞாயிறு

**28)** குழந்தைகளைப் பைசாவினால் தரையோடு தரையாக அறைந்து வைத்தவன்-

A) தண்டல்காரன் B) அஞ்சல் அலுவலன்

C) கந்து வட்டிக்காரன் D) தீப்பெட்டி ஆபீஸ்காரன்

Ans : (D) தீப்பெட்டி ஆபீஸ்காரன்

**29)** ஆணியில் தொங்குகிற சட்டை போன்று உள்ளீடற்றது -

A) இலட்சிய வாழ்க்கை B) திட்டமிட்ட செயல்

C) இலட்சியமில்லா வாழ்க்கை D) தேடாத செல்வம்

Ans : (C) இலட்சியமில்லா வாழ்க்கை

**30)** "அழகு அழகாய்ப் பூப்பூக்கும்

அம்மாடி என்று காய் காய்க்கும்" - இதன் விடை

A) எருக்கு B) நெருஞ்சி

C) சிறுமல்லி D) நெய்தல்

Ans : (B) நெருஞ்சி

31) அறத்தான் வருவது -

A) துன்பம் B) வீரம்

C) இன்பம் D) செல்வம்

Ans : (C) இன்பம்

32) மகனைச் சான்றோன் ஆக்குபவன் -

A) பாட்டன் B) மாமன்

C) தந்தை D) தனயர்

Ans : (C) தந்தை

33) செய்யுளுக்கே உரிய சொல் -

A) திசைச் சொல் B) திரிசொல்

C) வடசொல் D) உரிச்சொல்

Ans : (D) உரிச்சொல்

34) இறந்து விட்டாலும் மனிதன் செயலால் வாழ்ந்து கொண்டிருப்பது -

A) இடம் B) காலம்

C) உயிர்கள் D) பயன்கள்

Ans : (B) காலம்

**35)** கரை புரண்டோடும் ஆறு இவரை வணங்க வந்தது -

A) அன்னை மரியாள் B) தூதர் முகமது

C) வேல் முருகன் D) தானைத் தலைவன்

Ans : (B) தூதர் முகமது

**36)** தன்னம்பிக்கையைச் சுட்டெரிக்கும் இலக்கியங்களையும் ஏற்பாடுகளையும்-

A) ஏற்றுக்கொள் B) எழுதிவை

C) செய்து காட்டு D) இடறி விடு

Ans : (D) இடறி விடு

**37)** பரம்பரைத் தொழிலாளர்கள் கிராமத்தைக் கைவிட்டு நகர்ப்புறம் செல்லக் காரணம் -

A) கூலி கட்டாது B) வேலை அதிகம்

C) சோம்பல் மிகுதி D) வெயில் அதிகம்

Ans : (A) கூலி கட்டாது

**38)** சொந்தமில்லாதவர் வந்தவர் ஆள நாம் செய்து கொண்டிருந்தது -

A) வருந்தி இருந்தோம் B) சோம்பி இருந்தோம்

C) தூங்கிக் கிடந்தோம் D) நொந்து வருந்தினோம்

Ans : (C) தூங்கிக் கிடந்தோம்

**39)** தலைவி காந்தள் விரலால் பிசைந்தது -

A) வெண்ணெய் B) தயிர்

C) அமுது D) மண்

Ans : (B) தயிர்

**40)** 'தேசிய கவி' என்று போற்றப்பட்டவர் -

A) ஈரோடு தமிழன்பன் B) திரு.வி.க.

C) பாவேந்தர் D) சுப்பிரமணிய பாரதியார்

Ans : (D) சுப்பிரமணிய பாரதியார்